வாக்குமூலம்

குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லடம்

வழக்கு எண் : CC 22 of 2017

வழக்கு சாட்சி – PW 1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.சேகர் | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | சுப்பிரமணியம் | தொழில் | : | டீ கடை மற்றும் விவசாயம் |
| கிராமம் | : | கருணைபாளையம் பிரிவு | சமயம் | : | |
| தாலுக்கா | : | திருப்பூர் | வயது | : | 47 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 17.04.2023.

(எதிரி ஆஜர்).

முதல் விசாரணை: நாள்: 17.04.2023

1. நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்துக் கொண்டு டீ கடை தொழில் மற்றும் விவசாயம் செய்து வருகிறேன். கடந்த 22.01.2012 ம் தேதி நான் பெருந்துறை சென்று இருந்தேன். எனது மனைவி குழந்தையுடன் டீ கடையை பார்த்துக்கொண்டிருந்தார். அப்போது எதிரி சீனிவாசன் கடையில் உட்கார்ந்து இருந்துள்ளார். பின்பு மாலை 7.00 மணியளவில் எனது மனைவி வீட்டிற்கு சென்று லைட் போடுவதற்காக உள்ளே சென்று பார்த்தபோது எனது வீட்டிற்குள் இருந்த சீனிவாசன் என் மனைவியை பிடித்து தள்ளிவிட்டுவிட்டு வெளியே ஓடி வந்துவிட்டார். என் மனைவி உள்ளே சென்று பீரோவை பார்த்தபோது பீரோவில் இருந்த பணம் ரூ.4000/– காணவில்லை, அதை எடுத்துக்கொண்டு ஓடிவிட்டதாக எனது மனைவி எனக்கு போன் மூலம் தகவல் சொன்னார். உடனே நான் வந்து பார்த்துவிட்டு மறுநாள் காலை அவிநாசிபாளையம் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். நான் கொடுத்த புகார் **அ.சா.ஆ.1** ஆகும். பின்னிட்டு எதிரியை கைது செய்து அவரிடமிருந்து

ரூ.600/– யை பெற்று நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டது. நான் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து அந்த பணத்தை இடைக்கால பொறுப்பில் பெற்றுச்சென்றேன். நான் பெற்றுக்கொண்ட பணத்தை தற்போது நீதிமன்றத்தில் ஆஜர் செய்கிறேன். அது **சா.பொ.1** ஆகும். போலீசார் வழக்கு பதிவு செய்து என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்குவிசாரணை</u>

2. எனக்கு எழுத படிக்க தெரியும். புகாரினை நான் தான் எழுதினேன். வழக்கு சம்பவம் சம்மந்தமாக எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். வழக்கு சம்பவத்தை எனது மனைவி என்னிடம் கூறினார் என்றால் சரிதான். எனது டீ கடைக்கு அருகில் எத்தனை கடைகள் உள்ளது என்றால் 4, 5 கடைகள் உள்ளது. எனது கடைக்கு பின்னால் என்னுடைய வீடு உள்ளது என்றால் சரிதான். எனது காம்பவுண்ட் வீட்டில் உள்ளது என்றால் சரியல்ல.

3. எனது வீட்டிற்கு அருகில் எனது தம்பி வீடு உள்ளது என்றாலும், எனது வீட்டிற்கு அருகில் சுமார் 10 வீடுகள் உள்ளது என்றாலும் சரிதான். அந்த பகுதியில் எப்போதும் ஜன நடமாட்டம் இருக்கும் என்றாலும், வீட்டில் ஆட்கள் எப்போதும் இருப்பார்கள் என்றாலும் சரிதான். மாலை 6, 7 மணிக்கு மேலாக இருப்பார்கள். காலையில் கூலி வேலைக்கு செல்வார்கள். எனது வீட்டிற்கு எதிரில் யாருடைய வீடும் இல்லை, எனது வீட்டிற்கு பின்புறம் நாடார் வீடு. எனது வீட்டிற்கு அடுத்து கிழபுறத்தில் எனது தம்பி வீடு உள்ளது என்றால் சரிதான்.

4. நான் வீட்டை விட்டு வெளியே செல்லும்போது வீட்டை பூட்டி செல்வேன் என்றால் இல்லை, அருகிலேயே கடை இருப்பதால் வீட்டின் கதவை பூட்ட மாட்டேன். குடும்பத்துடன் வெளியூர் பயணம் செய்யும்போது மட்டுமே வீட்டை பூட்டி செல்வேன். எனது வீட்டில் பீரோவை பூட்டி வைப்பேனா என்றால் இல்லை. எனது வீட்டின் கதவு மரக்கதவு ஆகும். எதிரி சீனிவாசனின் மாமனார் வீடு எனது வீட்டிலிருந்து 4 வீடுகள் தள்ளி உள்ளது என்றால் சரிதான்.

5. எனது புகாரில் காணாமல்போனதாக கூறியுள்ள ரூ.4000/- தொகைக்கான நோட்டுகள் என்ன என்ன ரூபாய் நோட்டுகள் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எனது வீடு பூட்டி இருக்காது என்பது அருகில் குடியிருப்பர்கள் அனைவருக்கும் தெரியும் என்றால் சரிதான். உண்மையில் எதிரி என்னுடைய வீட்டிற்கு செல்லவில்லை என்றாலும், ரூ.4000/- தொகையை அவர் எடுக்கவில்லை என்றாலும், எனது வீடு பூட்டி இருக்காது என்பதை தெரிந்த அருகில் குடியிருக்கும் நபர்களில் யாரோ ஒருவர் எடுத்திருக்கலாம் என்றால் சரியல்ல. எனக்கும், எதிரியின் மாமனாருக்கும் ஏற்கனவே இருந்த பிரச்சனையை மனத்தில் கொண்டு பொய்யான புகார் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் எதிரி சம்பவ இடத்தில் இல்லை என்றாலும், எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை: இல்லை.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

K CHITHRA

Digitally signed by K CHITHRA
Date: 2023.04.17 20:17:51 +0530

நீதித்துறை நடுவர்
பல்லடம்

## வாக்குமூலம்

## குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லடம்

## வழக்கு எண் : CC 22 of 2017

## வழக்கு சாட்சி – PW 2

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திருமதி.ராணி | ஜாதி | : | |
| கணவர் பெயர் | : | சேகர் | தொழில் | : | டீ கடை மற்றும் விவசாயம் |
| கிராமம் | : | கருணைபாளையம் பிரிவு | சமயம் | : | |
| தாலுக்கா | : | திருப்பூர் | வயது | : | 43 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 17.04.2023.

(எதிரி ஆஜர்).

முதல் விசாரணை: நாள்: 17.04.2023

1. நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்துக் கொண்டு டீ கடை தொழில் மற்றும் விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1.சேகர் எனது கணவர் ஆவார். கடந்த 22.01.2012 ம் தேதி மாலை 7.00 மணிக்கு நான் கடையிலிருந்து வீட்டிற்கு லைட் போடுவதற்காக சென்றபோது எனது வீட்டின் கதவை திறந்து பீரோவிற்கு அருகில் சுவர் ஓரமாக ஆஜர் எதிரி சீனிவாசன் நின்றுகொண்டிருந்தார். என்னை பார்த்தவுடன் என்னை பிடித்து கீழே தள்ளிவிட்டுவிட்டு வெளியே ஓடிவிட்டார். பீரோவை பார்த்தபோது பீரோவில் இருந்த ரூ.4000/– காணவில்லை. உடனே எனது கணவருக்கு போன் மூலம் தகவல் சொன்னேன். என் கணவர் பெருந்துறை சென்றவர் அன்று இரவு 9.00 மணிக்கு வந்தார். பிறகு மறுநாள் காலையில் அவிநாசிபாளையம் காவல் நிலையம் சென்று எனது கணவர் புகார் கொடுத்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்குவிசாரணை</u>

2. போலீசார் என்னை புகார் கொடுத்தற்கு பின்னிட்டு என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். எனது கணவர் கொடுத்த அன்று போலீசார்

என்னை காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள் என்றால் சரிதான். வீட்டிலும் வந்து விசாரித்தார்கள். சம்பவ சமயத்தில் எங்கள் டீ கடைக்கு அருகில் எத்தனை கடைகள் இருந்தது என்றால் 4, 5 கடைகள் இருந்தது. எனது கொளுந்தனார் வீட்டிற்கு அருகில் சுமார் 20 வீடுகள் உள்ளது. சம்பவ தேதியன்று எனது மகள் செல்வநாயகி, பவித்ரா இருவரும் வீட்டில் இருந்தார்களா என்றால் பொதுவாக படிப்பதற்கு வீட்டில் இருப்பார்கள், சம்பவத்தின்போது நான் கடையிலிருந்து வீட்டிற்கு சென்ற சமயத்தில் வீட்டிற்கு வெளியே காம்பவுண்டுக்குள் சிறுவர்களுடன் விளையாடி கொண்டிருந்தார்கள்.

3. பொதுவாக வீட்டை பூட்டிவிட்டு செல்வேனா என்றால் சரிதான். சம்பவத்தின்போது எனது மகள்கள் வீட்டில் இருந்ததால் வீட்டை பூட்டவில்லை. சம்பவ சமயத்தில் பீரோ பூட்டப்பட்டிருந்ததா என்றால் பூட்டப்பட்டு பீரோவிலே சாவி தொங்கிகொண்டிருந்தது. சம்பவத்தின்போது மாலை நேரம் என்பதால் அருகில் உள்ளவர்கள் பேசிக்கொண்டும், ஜனநடமாட்டம் இருக்கும் என்றால் சரிதான். சம்பவம் சமயத்தில் மின்சார விளக்குகள் எரிந்ததா என்றால் எரிந்தது. எனது கடைக்கு முன்பாகவும், எனது வீட்டிற்கு முன்பாகவும் உள்ள தெரு விளக்குகள் எரிந்து கொண்டிருந்தது. போலீசார் விசாரணையின்போது கைரேகை மாதிரிகள் எடுத்தார்களா என்றால் எடுத்தார்கள்.

4. பீரோவின் பூட்டு உடைக்கப்பட்டிருந்ததா என்றால் இல்லை. சாட்சிகள் சிவன்மலையப்பன், பரமேஷ்வரன், செல்வராஜ், துரைசாமி ஆகியோர்கள் எனது உறவினர்கள் என்றால் சரிதான். மேற்படி சாட்சிகளை காவல் நிலையத்திற்கு அழைத்து சென்றோமா என்றால் அவர்களே வந்தார்கள். சிவன்மலையப்பன், பரமேஷ்வரன் ஆகியோரிடம் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் வாங்கினார்களா என்றால் வாங்கினார்கள். இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் அவர்களை விசாரித்தார்களா என்றால் எனக்கு தெரியாது. எனது வீட்டிலிருந்து காவல் நிலையத்திற்கு 5 கி.மீ தூரம் என்றால் சரிதான். காவல் நிலையத்திற்கு

போன் மூலம் தகவல் கொடுக்கலாம் என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியும். சம்பவத்தின்போது காவல் நிலையத்திற்கு போன் மூலமாக தகவல் கொடுத்தேனா என்றால் இல்லை.

5. உண்மையில் எதிரி என்னுடைய வீட்டிற்கு செல்லவில்லை என்றாலும், ரூ.4000/– தொகையை அவர் எடுக்கவில்லை என்றாலும், எனது வீடு பூட்டி இருக்காது என்பதை தெரிந்த அருகில் குடியிருக்கும் நபர்களில் யாரோ ஒருவரோ அல்லது வீட்டில் உள்ள நபர்களோ எடுத்திருக்கலாம் என்றால் சரியல்ல. எதிரி என்னை பிடித்து தள்ளிவிட்டார் எனவே அவர் எடுத்திருக்க வாய்ப்பு உண்டு. எதிரி சீனிவாசனின் மாமனார் வீடு எனது வீட்டிலிருந்து 4 வீடுகள் தள்ளி உள்ளது என்றால் சரிதான். எனது கணவருக்கும், எதிரியின் மாமனாருக்கும் ஏற்கனவே இருந்த பிரச்சனையை மனத்தில் கொண்டு பொய்யான புகார் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் எதிரி சம்பவ இடத்தில் இல்லை என்றாலும், எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றாலும் சரியல்ல.

6. எனது வீட்டிற்கு அருகில் உள்ள சக்திவேல் என்பவரையோ, எனது கொளுந்தனார் ஜெகநாதன் என்பவரையோ இந்த வழக்கில் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். வீட்டிற்கு வந்து போலீசார் வந்து விசாரித்தற்கு பின்னிட்டு நான் காவல் நிலையத்திற்கு செல்லவில்லை என்றாலும், அதன் பின்னிட்டு போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றாலும் சரிதான்.

மறுவிசாரணை: இல்லை.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

K CHITHRA

Digitally signed by K CHITHRA
Date: 2023.04.17 20:17:59 +0530

நீதித்துறை நடுவர்
பல்லடம்